# மாயைகளைக் களைந்து உண்மைகளை எதிர்கொள்வோம்.

இந்தியத் தூதுவர் அவர்கள் செப்டம்பர் 17ம் திகதி யாழ் கச்சேரியில் பலதரப்பட்ட பொதுமக்களுடன் கூட்டம் நடத்தினர்.
அவருடைய செய்தியின் சாரம் வருமாறு:-

*"தமிழ் மக்களுக்குப் பயன்தரக் கூடியதும், நிதானமான ஒரேவழியும்; வரவிருக்கும் வடக்கு கிழக்கு இணைப்பிற்கான மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றலாகும். இது அரசியல் வெற்றிடத்தை நிரப்பவும், குடியேற்றம் போன்றவற்றில் எழும் சர்ச்சைக்குரிய விடயங்களைத் தீர்த்துக் கொள்ளவும் உதவும். மேலும் தெரிவு செய்யப்பட்ட ஓர் மாகாணசபை, அதிகாரப் பரவலாக்கத்தை ஸ்தூலமாக்குவதுடன் அமைதியான சூழலை சாத்தியப் படாக்கும்."*

மேலோட்டமாகப் பார்க்கும்போது மேற்கூறிய கருத்துக்கள் சரியான வாதமாகவும், ஏற்புடையதாகவும் தென்படுகிறது. ஆனால் உண்மையான இன்றைய சூழலுடன் ஒத்துச் செல்கிறதா?

தேர்தல் எனக்கூறப்படும் நடைமுறையில் மக்கள் பங்குபற்றுதல் சாத்தியமானதாக இருந்ததா அல்லது இருக்குமா?

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறுவதாயின் துப்பாக்கி முனையின் (அது யார் கையில் இருந்தாலும்) நிர்ப்பந்தம் ஏதுமின்றி மக்கள் தமது முடிவுகளை எடுக்கக் கூடிய சூழல் இருத்தல் வேண்டும்.

இன்றைய நிலை என்ன?

இன்று தொடர்ச்சியாக நடைபெறும் பல்வேறு மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராக எந்த ஒரு தனிமனிதனோ அல்லது சமூக அமைப்புக்களோ எதிர்ப்புக் குரல் எழுப்ப முடியாத ஒரு நிலை உள்ளது என்பது தெரிந்ததே. மக்கள் பீதியில் வாழ்கிறார்கள். தமது கதி என்னவென்று அறியாது ஒரு பயங்கர பீதி நிறைந்த மௌனத்தில் வாழ்கிறார்கள். இந் நிலைக்கு I.P.K.F.உம், பல்வேறு போராளிக் குழுக்களும் செய்த, செய்யத் தவறிய நடவடிக்கைகள் காரணமாகும். மற்றும் வேட்பு மனுத்தாக்குதலையொட்டியதும், அதன் பின்னருமான சூழல் நிலைமைகளை மேலும் மோசமடைய வைத்துள்ளன. தினமும் பழிதீர்க்கும் கொலைகள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. பலியானவர்களில் எந்த ஒரு குற்றமும் அறியாத நடுத்தர வயது ஆண்களும் பெண்களும் அடங்குவர். பல சமயங்களில் இந் நடவடிக்கைகளின் பின்னணியில் IPKF இன் பங்கும் அதன் கண்டும் காணாத போக்கும் இருப்பது யாவரும் அறிந்ததே. எவருக்குமே இதை எதிர்ப்பதற்கான வழியோ, துணிவோ இல்லை. இதற்கு முக்கிய காரணம் மக்கள் IPKF இடமும் பிரதான போராளிக் குழுக்களிடமும் கொண்டிருக்கும் பீதியாகும். இந்நிலையில் சுதந்திரமான, நியாயமான வாக்களிப்பில் பங்கேற்குமாறு மக்களைக் கோரும் இந்திய அரசின் பல்வேறு பிரதிநிதிகளின் வேண்டுகோள்கள் அர்த்தமற்றதாகவும் கேலிக்குரியதாகவுமேயுள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக இச் சமூகத்தில் உருவாகி வந்துள்ள மேற்கூறிய அரசியல் நிலைமைகட்கு இந்தியாவின் விசேட பங்களிப்பும் பொறுப்பும் இருந்தது என்பதை கணக்கிலெடுக்க வேண்டும்.

போராளிகட்கு ஆயுதம் வழங்கத் தொடங்கிய 1983ம் ஆண்டுக் காலகட்டத்திலிருந்து இந்தியாவின் ஈடுபாடானது மக்களை உதாசீனப்படுத்தி அவர்களின் பங்களிப்பை கணக்கிலெடுக்காத போக்கை போராளிக் குழுக்கள் மத்தியில் உருவாக்குவதில் முனைப்பாக இருந்ததை அவதானிக்க முடியும். சில போராளிக் குழுக்களினுள் இந்திய மண்ணில் நடைபெற்ற கொலைகள் உட்பட பல்வேறு கிரிமினல் குற்றச்செயல்கள் திட்டமிட்டே பாராமுகத்துடன் விடப்பட்டது. இந்தியா பல்வேறு குழுக்களுக்கும் பொதுப் பராமரிப்பாளனாக இருந்தபோதே அவற்றிக் கிடையேயான பிளவுகளும் குரோதங்களும் மிக வேகமாக அதிகரித்ததோடு ஒருவரை ஒருவர் அழித்தொழிக்கும் நிலைக்கும் தள்ளியது.

இதனை நோக்கும் போது இந்தியா தனது சொந்த நலன்களைக் காப்பாற்றவே இப் பிளவுகளைத் தொடர்ந்து பேணுவதில் கருத்தாய் இருந்தது எனக் கருதுவது பிழையெனத் தெரியவில்லை. பெரிய இராணுவ அமைப்புக்களாக மாறிய இப் போராளிக் குழுக்கள் இந்திய அரசின் மறைமுக நாசகார ஏஜன்சிகள் உட்பட பல்வேறு பிரிவுகளுக்குப் பதில் கூற வேண்டியவர்கள் ஆயினர். இங்குள்ள மக்கள் இக்குழுக்களின் செயற்பாடுகளை கேள்விகேட்டு பாதிப்பை உண்டுபண்ணும் தன்மையை ஏறத்தாழ முற்றாகவே இழந்தனர். எம் சமூகத்தில் ஏற்பட்ட கொலைகளின் வீதமும், அளவும், அதன்காரணமாக ஏற்பட்ட சூழ்நிலையும் மக்களைப் பீதியுடன் வாழவைத்ததோடல்லாமல் அவர்களைச் செயலற்ற பார்வையாளர்களாக இருக்கும் நிலைக்கும் தள்ளியது. கடந்த காலத்தையும் தற்போதைய நிலையையும் நோக்கும்போது, வளமான ஒரு ஜனநாயக ஆட்சிமுறையை உருவாக்கும் நோக்கம் இந்தியா கொண்டுள்ளது என இந்திய அதிகாரிகள் கூறிக்கொள்வது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

எனினும் தேர்தல் சம்பிரதாயத்திற்காகவே நடைபெற்றாலும் தமிழ் மக்கள் யாரைத் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வது? தற்போதைய ஸ்திரமற்ற நிலைமையை நோக்கும்போது மக்களை ஆள்பவர்களை அல்லாது அவர்களின் பிரதிநிதிகளாகச் செயற்படக்கூடியவர்கள் எவரையும் தெரிந்தெடுக்க முடியாது. இந்தியாவும் பல்வேறு குழுக்களும் தமது நலன்களை எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பதிலிருந்தே தேர்தலின் எதிர்காலம் அமையும். அரசியற் கொலைகளினால் ஏற்பட்ட கசப்புணர்வுகளால் உருவாகிய பிரச்சினைகளை தேர்தல் முடிவுகள் தீர்த்துவிடப் போவதில்லை. இத்தகைய உணர்வுகளில் இருந்து விடுபட்டு மக்கள் தம் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடக்கூடிய நிலை உருவாகும் வரை தேர்தலானது எவ்வித உற்சாகத்துடனும் வரவேற்கப் படமாட்டாது.

தமிழ் மக்கள் பொதுவாக இந்தியா பற்றி மிகவும் மதிப்பான உணர்வைக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். சமய, கலாசாரத் தொடர்புகள் இருந்து வருகின்றன. இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களை இலங்கையர் பலர் மிக மதிப்புடன் பின்பற்றினர். மேலும் அண்மைக் காலங்களில் இலங்கை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து தப்பியோடிய தமிழருக்கு இந்தியா ஆதரவும், அடைக்கலமும் அளித்ததற்கு தமிழர்கள் நன்றியுடையவர்களாய் இருந்தனர். இந்தியா, ஸ்ரீ லங்கா அரசின் இனவாத போக்கைச் சர்வதேச அரங்கிற்குக் கொண்டுவந்தது பாராட்டிற்குரியது. ஆனால் அக்டோபர் 87ன் பின் நிலைமை வேகமாக மாற்றமடைந்தது.

1987ன் பிற்பகுதியில் IPKFஇன் செயற்பாட்டினால் ஏற்பட்ட இழப்புக்களும், படுகொலைகளும் தமிழர் இந்தியாமீது கொண்டிருந்த நம்பிக்கையை படிப்படியாகத் தகர்த்தது. காணாமற்போனவர்களின் அதிகரித்துவரும் எண்ணிக்கை, சித்திரவதைக் குட்படுத்தப் படுவோர் தொகை, இராணுவப் பாதுகாப்பில் ஏற்படும் மரணங்கள் என்பவை இன்றுவரை தொடர்ந்தும் குறையாது நடைபெறுகின்றன. இத்தகைய கொடூரமான உண்மைகளை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு எமது நன்மைக்கெனப் பாடுபடுவதாக இந்தியா சொல்லிக்கொண்டு பயமுறுத்தலுடனும் இறுமாப்புடனும் கட்டுப்பாடுகளை எம்மீது சுமத்தும் போது எமது சமுதாயம் தனது நலிவுற்ற நிலையை உணரவேண்டும். அமைதிக்கான உத்தரவாதத்திற்கு இந்தியாவின் துணையை எதிர்பார்ப்பதினால் தொடரும் பிரச்சினைகளைப்பற்றித் தமிழ் மக்கள் அறிந்திருக்கவேண்டும். தற்போதைய தேர்தல் எமது சமுகத்தின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் என்பது சந்தேகத்திற்குரியது என்பது தெளிவு.

இந்நிலையில் மாற்றுவழி என்ன? மக்களிற்கு கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாதது பற்றி பிரஸ்தாபித்துக்கொண்டு சகலபிழைகளையும் இந்தியத் தலைபீட்டில் மட்டும் போட்டுவிட்டு இருந்துவிடுவது பொறுப்பற்றதும் தோல்விமனப்பான்மையின் அடிப்படையிலான செயலுமாகும். அவ்வாறான செயல் வெற்று இந்திய எதிர்ப்பு வாதமாக இருக்குமே யல்லாது எமது சமூகம் இப்போதைய சிக்கலிலிருந்து விடுபட எந்தவிதத்திலும் உதவாது. இது வெளிச்சக்திகளிலேயே எமது முனைப்பையும் அவர்களால் தொடர்ச்சியாக கட்டுப்படுத்தும் தகைமையையும் தொடர்ந்து விட்டுவைக்கும்.

நாம் இந்தியாவுடனும் இலங்கை அரசுடனும் கொண்டுள்ள உறவை ஆராய்வது மட்டும் போதாது. எம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். எமது சமூகத்திலிருக்கும் குறைபாடுகளான வன்முறைக்கு அடிபணிந்து போதல் சந்தர்ப்பவாதம், எம்மிடையே நடைபெற்ற

கொலைகளை ஆட்சேபிக்கும் தைரியமில்லாத நம்மவரின் தன்மை என்பனவே, வெளிச்சக்திகள் அதே ஆயுதங்களை நம்மீது பயன்படுத்த வழிகோலின. எமது சமூகத்தில் தலைதூக்கியிருக்கும் ஜனநாயகவிரோத செயல்களை மறைமுகமாக ஏற்றுக்கொண்டும், பாராமுகமாக இருந்துகொண்டும், ஜனநாயகத்திற்கு வேண்டுகோள் விடுவது அர்த்தமற்ற செயலாகவே இருக்கும். அரசியற் சக்திகளின் நடவடிக்கைகளுக் கெதிராகக் கண்டனக்குரல் எழுப்பிய அநேக தனிநபர்களும், இளைஞர்களும் நம் கண்முன்னே, நாம் வாழாவிருக்க, பழிவாங்கப்பட்டு, நாட்டைவிட்டோடப் பண்ணியோ அல்லது கொல்லப்பட்டோ இருக்கின்றனர்.

இவ்விதம் மக்கள் தாம் இழந்த உறுதிப்பாட்டையும் மாண்பையும் மீண்டும் பெறவிரும்பினுல் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்த முறையில்நேர்மையான கோட்பாட்டின் அடிப்படையில் நிலைமையை எதிர்கொள்ளும் திசையை நோக்கி நகரவேண்டும். நாம் உணர்வுபூர்வமாகவும் ஏற்றுக்கொண்ட பொதுமையான பெறுமானங்களை நிலைநிறுத்த முயலவேண்டும்.

இத்தகைய உறுதியான நிலைப்பாடு எடுக்காததினுலேயே பிறர் கொலை செய்யப்படும்போது அந்நிகழ்ச்சிகளை எதிர்க்காது இருந்ததுடனல்லாது தொடர்ச்சியாக கையாலாகாத் தனத்துடனும் பீதியுடனும் அந்நோயை வளரவிட்டு இன்று எம் ஒவ்வொருவரது உயிரிற்கும் ஆபத்து எனும் துர்ப்பாக்கிய நிலை உருவாக உதவியுள்ளோம். அதாவது கடந்த காலத்தில் நாம் பாராமுகமாக இருந்ததன் வினைவை இப்போது அனுபவிக்கின்றோம்.

கடந்த காலத்தை நோக்கினுல் நாம் பொதுப் படையில் ஒன்றிணைந்த மக்களாக, தொழிற்துறை சார்ந்தவர்களாக, நிறுவனங்களாக அல்லது தொழிற்சங்கங்களைச் சார்ந்த சாதாரண தொழிலாளர்களாகச் செய்யத்தவறிய இரண்டு அம்சங்களை இனங்கண்டு கொள்ளலாம். ஒன்று அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி குழம்பியிருந்ததன் காரணமாக எவ்விதமான பொதுவான வேலைத்திட்டத்தையும் வகுப்பதில் தோல்வி கண்டோம். இரண்டாவது ஒருவர் துணிந்து நின்றுல் அவரது சகா அவரைக் கைவிட்டு விடுவதனுல் ஆபத்தான நிலைக்கு அவர் தள்ளப்படலாம் என்ற பயம். இதன் காரணமாக சில தனிப்பட்ட பயமுறுத்தல்கள்; அவை உண்மையானவையோ கற்பனையானவையோ, அல்லது துப்பாக்கி பற்றிய சில முணுமுணுப்புக்கள்கூட நிறுவனங்களை ஸ்தம்பிதமடையச் செய்யப் போதுமானவையாக இருந்தன. மேலும் உழைப்பிலும் சேவையிலும் பெறும் பெருமித உணர்வை இழந்து அவை இரண்டாம் பட்சமாகும் நிலையில் நாம் ஒரு விதத்தில் மனிதாம்சத்தை இழந்து வருகிறோம்.

இவ்வாறுன சிக்கலான நிலைமையில், பல்வேறு முனைகளிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து தலைமை தாங்க யாரும் முன்வரத் துணியாத இக்கட்டத்தில் நாம் எவ்வாறு மக்கள் என்ற வகையிலான நிலைப்பாட்டை உறுதி செய்யலாம்? தனி நபர்களாக அல்லது சிறு குழுக்களாக எமது அயலிலும், வேலைத்தலங்களிலும், சங்கங்களிலும் மற்றும் அமைப்புக் களிலும் நமது கடந்த காலத்தை நேர்மையுடன் ஆராயவேண்டும். நாம் எங்கு தவறிழைத்தோம் என்பதைக் கண்டுணர்ந்து எமது கொள்கைகளை மீளாராய்வு செய்தல் வேண்டும். நாம் மற்றவர்களுக்காகக் குரல் கொடுப்பதென்பது எமக்காகவும் குரல் கொடுக்கின்றோம் எனும் கடந்தகால அநுபவத்தினூடாக வரும் செய்தி பற்றி சரியான புரிந்துணர்வு அவசியம். இந் நிலைப்பாட்டை எடுப்பதற்கு எமக்கு மிகவும் துணிச்சல் வேண்டும். மேலும் எமக்கு இதைவிட வேறு வழியில்லை. கடந்த காலத்தில் நாம் பாதுகாப்பாக, தப்பிவாழ முனைந்துள்ளோம். அதன் வினைவு பல்வேறு முனைகளிலிலும் இருந்து வந்த பாரிய அளவிலான படுகொலைகளே. போராளிகளல்லாத, சாதாரண குடிமக்கள் நிராயுத பாணிகளாக, முனினேறிவரும் இராணுவங்களின் வெறிக்கு முகம் கொடுக்கும் முன்னணிப் படையாகினர்.

தற்போது தென்பகுதியில் குறுகிய அரசியல் நோக்குகளைக் கொண்ட சக்திகளின் துரித வளர்ச்சியும் பரவலான செயற்பாடுகளும் மிகவும் இருள்மயமான எதிர்காலத்தையே எம்முன் நிறுத்துகின்றது. இது மேலும் வெளிச்சக்திகளின் தலையீட்டிற்கும், ஈடுபாட்டிற்கும் வழி கோலுவதாகவே அமையும். செயலின்மை எனும் போக்கின் கைதிகளாக்கி எம்மை இரட்சிக்க யாரும் வருவார்கள் எனும் நம்பிக்கையில் எதுவித தயாரிப்புமின்றி தொடர்ந்து நாம் இருப்பது எவ்வளவு தவருனது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

(மேற்காணும் அறிக்கை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலரினுல் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டது. 1.11.88 வரையில் கையொப்பமிட்டவர்களின் பட்டியல் இணைக்கப் பட்டுள்ளது.)

| | | |
|---|---|---|
| 01. | வி. ஆறுமுகம் | (கல்வித்துறை) |
| 02. | கே.கே. அருள்வேல் | |
| 03. | செல்வி எஸ். அருளானந்தம் | |
| 04. | பாலச்சந்திரன் | (புவியியல்) |
| 05. | பி. பாலசுந்தரம்பிள்ளை | (புவியியல் பேராசிரியர்) |
| 06. | ஏ.ஜே. கனகரத்தினம் | (ஆங்கிலம்) |
| 07. | வி.கே. கணேசலிங்கம் | (விலங்கியல் பேராசிரியர்) |
| 08. | பி. கோபாலகிருஷ்ணன் | |
| 09. | எம்.ஆர்.ஆர். கூல் | (கணிதம்) |
| 10. | செல்வி எஸ். இந்திராதேவி. | |
| 11. | எஸ். கந்தையா | (தாவரவியல்) |
| 12. | திருமதி பி. கந்தசாமி | (மொழியியல்) |
| 13. | கே. குகபாலன் | |
| 14. | ஏ. கணபதிப்பிள்ளை | (புவியியல்) |
| 15. | செல்வி கே. கந்தசாமி | |
| 16. | ஆர். கைலைநாதன் | |
| 17. | பி. மகினன் | (கணிதம்) |
| 18. | எம்.ஏ. நுஃமான் | |
| 19. | பி. புஷ்பரட்ணம் | |
| 20. | எஸ்.வி. பரமேஸ்வரன் | (உடல்நூல் பேராசிரியர்) |
| 21. | என். பேரின்பநாதன் | (பொருளாதாரம்) |
| 22. | வண ஜி.எவ். ராஜேந்திரன் | (விலங்கியல்) |
| 23. | ஆர். ராஜ்மோகன் | (தத்துவஞான சாஸ்திரம்) |
| 24. | கே. ரூபமூர்த்தி | (புவியியல்) |
| 25. | எஸ்.ரி.பி. ராஜேஸ்வரன் | |
| 26. | என். சிவபாலன் | (இரசாயனவியல்) |
| 27. | ஏ.எம்.ரி. சவரிமுத்து | (தாவரவியல்) |
| 28. | ஆர்.வி.எஸ். சுந்தரேசன் | (தாவரவியல்) |
| 29. | கே. ஸ்ரீதரன் | (கணிதம்) |
| 30. | திருமதி என். செல்வராஜ் | (விலங்கியல்) |
| 31. | எஸ்.கே. சிற்றம்பலம் | (சரித்திரம்) |
| 32. | செல்வி சி.சின்னராஜ் | (இந்து நாகரிகம்) |
| 33. | வி. சிவசாமி | (சமஸ்கிருதம்) |
| 34. | ஏ. சண்முகதாஸ் | (தமிழ்/மொழியியல் துணைப்பேராசிரியர்) |
| 35. | எஸ்.ஜி. சிவகுருநாதன் | (ஆங்கிலம்) |
| 36. | ஜே. சத்தியதாஸ் | (புள்ளிவிபரம்) |
| 37. | ஜி.எம். செபஸ்ரியாம்பிள்ளை | (சமூகவியல்) |
| 38. | எஸ். சத்தியசீலன் | |
| 39. | செல்வி எஸ். சுபத்திரை | |
| 40. | எம். சண்முகலிங்கம் | |
| 41. | ஆர். சிவச்சந்திரன் | (புவியியல்) |
| 42. | செல்வி ஏ.சவரிமுத்து | (ஆங்கிலம்) |
| 43. | ஏ.துரைராஜ் | (பேராசிரியர் சிவில் பொறியியல் துறை) |
| 44. | திருமதி ஆர். திரணகம | (உடற்கூற்றியல்) |
| 45. | டபிள்யூ. வெங்கடேஸ் | (விலங்கியல்) |
| 46. | பி. விஜேபா | (விலங்கியல்) |
| 47. | திருமதி சி. வாமதேவா | (இந்துநாகரிகம்) |
| 48. | எம். வேதநாதன் | |
| 49. | செல்வி வி. வீரகத்தி | (ஆங்கிலம்) |
| 50. | செல்வி எஸ். வாசுகி | (தத்துவஞான சாஸ்திரம்) |